# Chapter 1 அன்னைத் தமிழே!

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

### சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

Question 1.
அன்னை + தமிழே – என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ………………..
அ) அன்னைந்தமிழே
ஆ) அன்னைத்தமிழே
இ) அன்னத்தமிழே
ஈ) அன்னைதமிழே
Answer:
ஆ) அன்னைத்தமிழே

Question 2.
பிறப்பெடுத்தேன் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது……………………
அ) பிறப் + பெடுத்தேன்
ஆ) பிறப்பு + எடுத்தேன்
இ) பிறப் + எடுத்தேன்
ஈ) பிறப்ப + எடுத்தேன்
Answer:
ஆ) பிறப்பு + எடுத்தேன்

Question 3.
மறந்துன்னை – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது……………………
அ) மறந்து + துன்னை
ஆ) மறந் + துன்னை
இ) மறந்து + உன்னை

ஈ) மறந் + உன்னை

Answer:

அ) மறந்து + துன்னை

Question 4.

சிறப்படைந்தேன் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது........................

அ) சிறப்பு + அடைந்தேன்

ஆ) சிறப்பு + அடைந்தேன்

இ) சிற + படைந்தேன்

ஈ) சிறப்ப + அடைந்தேன்

Answer:

அ) சிறப்பு + அடைந்தேன்

Question 5.

என்னில் என்ற சொல்லின் பொருள்........................

அ) உனக்குள்

ஆ) நமக்குள்

இ) உலகுக்குள்

ஈ) எனக்குள்

Answer:

ஈ) எனக்குள்

## வினாக்களுக்கு விடையளி

Question 1.

சொல்லில் விளையாடச் சொல்லித் தந்தவள் யார்?

Answer:

சொல்லில் விளையாட சொல்லித்தந்தவள் தமிழன்னை ஆவாள்.

Question 2.

எதைச் சொல்ல முடியவில்லை என்று இப்பாடலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்?

Answer:

தமிழ்ச்சொல்லினால் தமிழன்னையின் புகழைச் சொல்ல முடியவில்லை என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

Question 3.

இப்பாடலின் ஆசிரியர் அன்னைத் தமிழை எவ்விதம் புகழ்கிறார்?

Answer:

"என் அன்னையாகிய தமிழே! என் உயிரில் கலந்தவளே! என்னை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், என் உடன் சேர்ந்து வளர்பவளே! உன்னைப் புகழ்வதற்காகவே இவ்வுலகில் பிறந்துள்ளேன். சொல் கொண்டு விளையாடுவதற்குச் சொல்லிக் கொடுத்தவளே! அதே சொல்லினால் உனது புகழை என்னால் கூற முடியவில்லையே!" என்று ஆசிரியர் அன்னையாகிய தமிழைப் புகழ்கிறார்.